R4778

# 1911 - MEMORIAL SUPPER - 1911

## 1911–இராப்போஜன நினைவுகூருதல் – 1911

ஒரு வாரம் நீடிக்கக்கூடிய யூதர்களின் பஸ்கா இந்த வருடம் (1911) ஏப்ரல் 13, வியாழக்கிழமை ஆரம்பிக்கிறது. அதன் யூத கணக்கீடு முதல் மாதம் 15ஆம் தேதியாகும். யூத கணக்கீட்டின்படி ஒரு நாள் என்பது மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கிறது. இதன்படி 15ஆம் தேதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கிறது. புதன்கிழமை ஏப்ரல் 12ஆம் தேதி முதல் மாதத்தின் 14ஆம் தேதியாக இருக்கிறது. அதன்படி அது ஏப்ரல் 11ஆம் தேதி செவ்வாய்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பிக்கிறது. இப்படியாக அது கர்த்தரின் முதலாவது இராப்போஜன ஆசாரிப்பின் வருடாந்திர நாளாக இருக்கிறது.

காவற்கோபுரத்தின் வாசகர்கள் நமது இரட்சகரின் மரணத்தின் வருடாந்திர நாளை உலகம் முழுவதும் ஆசாரிப்பது வழக்கமாக இருக்கிறது. இந்த வருடத்தின் ஆசாரிப்பு ஒரு பொதுவானதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். நினைவு கூருதலின் முக்கியத்துவம் பிப்ரவரி 1ஆம் தேதி பிரதியிலும், வேதாகம பாடங்கள் 6ஆம் தொகுதியிலும் விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஏப்ரல் 11ஆம் தேதி மாலை 7.30 மணிக்கு புரூக்லின் ஆலயத்தில் நியூயார்க் சபை நினைவுகூருதலை ஆசரிப்பதற்காக கூடுகிறது. கர்த்தரிடத்தில் இருதய பூர்வமான ஐக்கியம் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களையும் அதில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். எனினும் அதே சமயம் மற்ற சபையின் சகோதரர்கள் யாரையும் விசேஷமாக அழைக்கவில்லை. கர்த்தரின் பிள்ளைகளின் வீட்டார் அல்லது ஒவ்வொரு சபையும் இதைக்குறித்த கர்த்தரின் வார்த்தைகளின் போதனைகளை அறிந்திருப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஏப்ரல் 9ஆம் தேதி நினைவு கூருதலுக்கு முன் வரக்கூடிய ஞாயிறு அன்று புரூக்கிளின் ஆலயத்தில் மாலை 3 மணிக்கு ஞானஸ்நான ஆராதனை இருக்கும். ஞானஸ்நானத்தை பற்றிய பாடம் வேதாகம பாடங்கள், 6ஆம் தொகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்த அடையாளத்தில் பங்குபெற வேண்டும் என்கிற எல்லா எண்ணமும் இந்த பாடத்தைப் பற்றிய மிகவும் நல்ல ஆராய்ச்சி தேவைப்படுகிறது. சரியான அறிவுடன் அ தில் பங்குபெற வேண்டும்.

நினைவுகூருதலுக்கு முன்னதாக, முடிந்தால் வேத மாணவர்களின் கூடுகையில் ஞானஸ்நான சந்தர்ப்பத்தை தர வேண்டும் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம். நினைவுகூருதலின் ஆசாரிப்பு ஒரு மாபெரும் சலுகையாக மதிக்கப்பட வேண்டும். யாராவது கர்த்தருடன் இருதய ஐக்கியத்தில் இல்லையென்றால் முதலாவது அவரை நீக்க வேண்டும். ஒருவர் கர்த்தருடைய பலிபீடத்திற்கு வரவேண்டும் என்றால் முடிந்தவரை வருவதற்கு முன்னால் அனைத்து “விசுவாச வீட்டாருடன்” இருதய ஐக்கியத்திற்குள் வரவேண்டும் என்று அவர் கூறுகிறார். ஆகையால் இதுவே இருதயத்தை தேடுகிற மற்றும் பரிசுத்தம் பண்ணுகிற நேரமாக இருக்க வேண்டும். இது யூத பஸ்காவில், புளிப்பை தேடி அதை நீக்குகிற அடையாளத்தில் காட்டப்பட்டுள்ளது. புளிப்பு என்பது பரிசுத்தம், நீதி மற்றும் அன்புக்கு எதிரான பாவம் மற்றும் அசுத்தத்திற்கு அடையாளமாக இருக்கிறது.

இந்த காலப்பகுதியில் ஒருவர் கர்த்தருடன் நல்லிணக்கம் இல்லாதிருந்து, மேலே சொல்லப்பட்டிருக்கிற யோசனைப்படி, சலுகையை பயன்படுத்தும்படி தேவனுடைய சலுகைக்கு திரும்பி வர நாடினால் நிச்சயமாக அவர் ஒரு பெரும் ஆசீர்வாதத்தை அனுபவிப்பார். இந்த சந்தர்ப்பத்தை கடந்து சென்றால், யாரும் இழக்கக்கூடாத ஒரு ஆசீர்வாதத்தை இழப்பார். அப்படிப்பட்ட சமயத்தில் நமது சொந்த பலவீனங்களை உணருவது நம்மை அதைரியப்படுத்தவோ உற்சாகம் குன்றச் செய்யவோ கூடாது. அதைவிட நமது மாபெரும் பரிகாரியின் மூலம் தேவனுடன் நல்லிணக்கத்திற்காக தேவனுடைய கிருபையை நினைவுகூர வேண்டும். நமது பரிகாரியின் மரணத்தைத்தான் நாம் நினைவுகூருகிறோம். மேலும் நம்மை கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக்கிய பலியின் உடன்படிக்கையை நாம் நினைவுகூருவோமாக.

இந்த பஸ்கா காலத்தில் கரத்தருடைய அர்ப்பணம் செய்த ஜனங்களை சோதிப்பதற்கு சாத்தான் விசேஷித்த வல்லமையை பெற்றிருப்பதை சில வருடங்களாக நாம் காண்பதை நமது வாசகர்களுக்கு ஞாபகப்படுத்துவது தவறாக இருக்காது. நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்ட இந்த காலத்தில் சாத்தான் விசேஷித்த வல்லமையை பெற்றிருக்கிறான். அப்பொழுது யூதாஸ் அடிபணிந்தார். பரிசுத்த பேதுரு மோசமாக இடறினார். மற்ற அப்போஸ்தலர்கள் அனைவரும் ஆண்டவரை கைவிட்டு ஓடி விட்டனர். அவர்கள் பெந்தெகொஸ்தே வரை ஆழ்ந்த குழப்பத்தில் இருந்தனர். “நீங்கள் சோதனைக்கு உட்படாத படிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்” என்கிற ஆண்டவரின் புத்திமதி இப்பொழுது நல்லதாக இருக்கிறது.